**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.77/2019**

**Prosecution Witness : 1**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : ஆனந்தபாபு | **Caste** | : | |
| **Father's Name** | : நாகேந்திரன் | **Calling** | : | ரயில்வே துறை |
| **Village** | : | **Religion** | : | |
| **Taluk** | : தேனி | **Age** | : | **42/2026** |
| | | **Dated** | : | **09.06.2026** |

**09.06.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1,2 எதிரி ஆஜர். 3 எதிரி ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த சம்பவத்திற்கு முன்பாக நான் எத்தனை ஆண்டுகளாக பணியில் இருந்தேன் என்றால் நான் 1.07.2017 அன்று தான் பணியில் சேர்ந்தேன். சுமார் 3 மாத காலம் இருக்கும். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் இருபுரமும் வண்டி வந்துகொண்டிருந்ததால் கேட்டை இறக்கி அப்படியே லாக் செய்தேன் என்று சொன்னதை எனது புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகாரில் 7 பேர் வந்து கேட்டை தூக்கினார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் 3 பேர் கேட்டை திறக்கச்சொல்லி என்னிடம் கேட்டதாக கூறினேன் என்றால் சரிதான். மீதி நபர்கள் கேட்டின் அருகில் இருந்தார்கள்.

எனது புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சுமோவில் வந்த 4 நபர்கள் ஆபாசமான வார்த்தைகளால் பேசி என்னை சட்டையைப்பிடித்து இழுத்தும் சவுல் எடுத்து அடித்ததாகவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சொன்னேன். எனது புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சுதாகர் மோகன் உதவியுடன் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று அனுமதிக்கப்பட்டேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எனது புகாரிலும், போலிசார் விசாரணையிலும் என்னை தாக்கி மிரட்டிய நபர்களின் தோற்றம் மற்றும் அடையாளங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு அவர்களைப்பற்றி தெரியாததால் தான் அவர்களின் பெயரை போலிசார் விசாரணையிலும் புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்ந்த போது மருத்துவரிடம் அடையாளம் தெரியாத 15 நபர்கள் என்று தான் கூறினேன் என்றால் சரிதான்.

எனது புகாரிலும், போலிசார் விசாரணையிலும் என்ன என்ன பொருட்கள் சேதமாகியது மற்றும் என்ன என்ன பொருட்கள் காணாமல் போனது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் பொருட்கள் என்று மட்டும் குறிப்பிட்டிருந்தேன். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் எந்தவிதமான சம்பவும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றாலும் அதனால் தான் அவர்களைப்பற்றிய தகவல் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. புகாரில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் உண்மையில்லை என்றால் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.06.09 12:27:27 +0530

Judicial Magistrate No.II
Dindigul.